**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் :SC.No.564/2023**
**வழக்கு சாட்சி PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வெள்ளத்தாய் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ராமையா கரையாளர் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | கரையாளனூர் | வயது | : | 51 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Wednesday of 08.07.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கரையாளனூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 சங்கீதா எனது மகள். அ.சா.2 திரவியம் எனது கணவர். எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது கணவரின் சகோதரர். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு 2 வது மாதம், 6 ம் தேதி காலை 06.45 முதல் 07.00 மணிக்குகள் எனது கணவர் எங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள கிணற்றில் தண்ணீர் பாய்ச்சி கொண்டிருந்தார். நான் காபி கொடுப்பதற்காக போகும்போது, சத்தம் கேட்டது. அந்த சத்தம் கேட்டு எனக்கு பின்னால் எனது மகள் சங்கீதா, எனது மகன் மணிகண்டன், எனது மருமகள் கிருஷ்ணவேணி ஆகியோர்கள் வந்தார்கள்.

அப்போது அங்கு எதிரி பீஸ் கேரியரை பிடுங்கினார். நான் எதிரியிடம், எதற்காக இப்படி பிரச்சனை செய்கிறீர்கள் என்று கேட்டேன். அப்போது எதிரி எனது கணவரை பார்த்து, உன்னை கொல்லத் தான் வந்திருக்கேன் என்று சொல்லி அரிவாளால் எனது கணவரின் தலையில் வெட்டினார்.

பின்னர் நெஞ்சில் வெட்டினார், அதன் பின்னர் வெட்ட வரும்போது எனது கணவர் கையால் தடுத்தார். அப்போது அந்த வெட்டு இடது கையில் பட்டு தொங்கியது. அதன் பின்னர் நானும், எனது மகள், எனது மகன் ஆகியோர்கள் தூக்கிகொண்டு வீட்டு பக்கம் கொண்டு சென்று ஆட்டோவை வரச்சொன்னோம். எனது மருமகள் அந்த சமயத்தில் 9 மாத கர்ப்பிணியாக இருந்தார்.

நானும், எனது மகன் மற்றும் மற்றொரு நபரும் சேர்ந்து எனது கணவரை ஆலங்குளம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு சென்றோம். அதன் பின்னர் மேல்சிகிச்சைக்காக நாகர்கோவில் தனியார் மருத்துவமனைக்கு நானும், எனது மகனும் எனது கணவரை அழைத்து சென்றோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும், எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. )

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.09 18:06:40 +0530